**வாக்குமூலம்**
**சார்பு நீதிமன்றம், ஒட்டன்சத்திரம்.**
**O.S.No.148/2024**
**வழக்கு சாட்சி P.W.1**
**1873ம் ஆண்டின் 10வது விதியின்படி திரு.K.கார்த்திக் அவர்களால் திறந்த நீதிமன்றத்தில் சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : ஜோதிமணி | தொழில் | : தனியார் வேலை |
| தகப்பனார் பெயர் | : வேலுச்சாமி | கணவர் பெயர் | : --- |
| கிராமம் | : ஒட்டன்சத்திரம் | வயது | : சுமார் 68 |
| தாலுக்கா | : ஒட்டன்சத்திரம் | நாள் | : 23.01.2026 |
| மாவட்டம் | : திண்டுக்கல் | | |

**2-ம் பிரதிவாதி தரப்பில் மேற்கொள்ளப்படும் குறுக்கு விசாரணை :**

நான் வங்கியில் கடன் பெற்றுள்ளதாக சொல்லியுள்ள நிலையில் எந்த வங்கியில் எப்போது கடன் பெற்றேன் என்றால் ? கார்ப்பரேசன் வங்கியில் கடந்த 2017ம் ஆண்டு கடன் பெற்றேன். இந்த வழக்கில் 2-ம் பிரதிவாதியான வேலம்மாள் என்பவரை எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் ? தெரியாது. நான் வங்கியில் தொகை ரூ.4,00,000 கடனாக பெற்றுக் கொண்டு கடந்த 01.09.2016ம் தேதி ஆவண எண்.2085/2016 என்ற ஆவணத்தின் தன்மைபடி சொத்தினை அடமானம் வைத்து 1-ம் பிரதிவாதி வங்கியிடம் கடன் பெற்றேன் என்றால் ? சரிதான். 1-ம் பிரதிவாதியிடம் பெற்ற கடன் தொகையை நான் செலுத்தாத காரணத்தினால் வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்கள் கடனை திரும்ப வசூலிக்கும் சட்டத்தின் தன்மை படி (SARFAESI ACT 2002) சொத்துக்கள் ஏல நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்ட விபரம் எனக்கு தெரியுமா என்றால் ? தெரியாது. 1-ம் பிரதிவாதி வங்கி நிர்வாகத்திடம் நான் பெற்ற கடனை திரும்ப செலுத்தாத காரணத்தினால் 1-ம் பிரதிவாதி நிர்வாகம் (SARFAESI ACT 2002) ன் படி நடவடிக்கை எடுத்தார்களா என்றால் ? நான் வங்கி நிர்வாகத்தை அணுகி சமரசம் பேசினேன். சமரசம் பேசப்பட்டபோது பத்திரத்தை கேட்டோம்.

நீதிமன்றத்தல் பத்திரத்தை கேட்டோம். எப்போது வழக்கு முடியுமோ அப்போது பத்திரத்தை திருப்பி தருவோம் என்று சொன்னார்கள். SARFAESI ACT 2002 சட்டப்படி சொத்துக்களை எடுக்கப்போவதாக வங்கி நிர்வாக தரப்பில் இருந்து அறிவிப்பு அனுப்பினார்களா என்றால் ? ஆமாம். நான் கடன் தீர்ப்பாயத்தை SARFAESI ACT 2002 சட்டப்படி அணுகினேனா என்றால் ? இல்லை. 1–ம் பிரதிவாதி வங்கி நிர்வாகம் சொத்தினை ஏலம் விடுவதற்கு முன்பாகவே அவர்கள் வசம் எடுத்துக் கொண்டார்கள் என்றால் ? இல்லை. 1–ம் பிரதிவாதி வங்கி நிர்வாகம் சொத்தினை ஏலத்திற்கு விடுவதாக தமிழ் மற்றும் ஆங்கில செய்திதாள்களில் விளம்பரம் பிரசுரித்ததால் 2–ம் பிரதிவாதி ஏலத்தில் கலந்து கொண்டார் என்றால் ? அது பற்றி தெரியாது. அவ்வாறு கலந்து கொண்டு அதிகப்படியான தொகைக்கு சொத்தினை ஏலத்திற்கு எடுத்தார் என்றால் ? அது பற்றி எனக்கு தெரியாது. 2–ம் பிரதிவாதி வேலம்மாள் ஏலத்தொகையை முழுவதுமாக வங்கிக்கு செலுத்திவிட்டார் என்ற விபரம் தெரியுமா என்றால் ? எனக்கு தெரியாது. 2–ம் பிரதிவாதி சொத்தினை ஏலத்தில் எடுத்த காரணத்தினால் கடந்த 07.11.2022ம் தேதி 2–ம் பிரதிவாதிக்கு 1–ம் பிரதிவாதியால் விற்பனை சான்றிதழ், ஏலச் சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது என்றால் ? அது பற்றி எனக்கு தெரியவில்லை. எனது சொத்தினை அநியாயமாக ஏலத்திற்கு எடுத்துவிட்டார்கள். ஏற்கனவே 2–ம் பிரதிவாதி ஏலம் எடுத்த பிறகு விற்பனை சான்றிதழின் தன்மைபடி கடந்த 09.01.2024 தேதி 1–ம் பிரதிவாதி, 2ம் பிரதிவாதிக்கு முறைப்படி திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் சார்பதிவக அலுவலக ஆவண எண்.71/2024 என்ற ஆவணத்தின் தன்மை படி விற்பனை ஆவணம் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் ? அது பற்றி எனக்கு தெரியாது. பத்திர பதிவு அலுவலகத்தில் 1–ம் பிரதிவாதி விற்பனை சான்றை பதிவு செய்த விபரம் எனக்கு எப்போது தெரிய வந்தது என்றால் ? பத்திரப்பதிவு அலுவலகத்தில் உள்ள ஆவண எழுத்தர்கள் எனக்கு தெரிந்தவர்கள் என்பதால் அவர்களை அழைத்து என்னிடம் பத்திரம் பதிவு ஏற்பட்டது பற்றி சொன்னார்கள். எந்த

வருடம் எந்த மாதம், எந்த தேதியில் சொன்னார்கள் என்றால் ? எனக்கு சரியாக ஆண்டு, மாதம் நினைவில் இல்லை. 1–ம் பிரதிவாதியிடமிருந்து 2–ம் பிரதிவாதிசட்ட விதிகளை பின்பற்றி சொத்தினை ஏலம் எடுத்துள்ள நிலையில் நான் தற்போது வழக்கிற்காக வேண்டி பொய்யான சங்கதிகளை சொல்லி இவ்வழக்கை தாக்கல் செய்து சொத்தின் மீது உரிமை பாத்தியம் கோருகிறேன் என்றால் ? சரியல்ல. வங்கிக்கு செலுத்த வேண்டிய முழுத்தொகையையும் 2–ம் பிரதிவாதி செலுத்தி சட்டவிதிகளுக்கு உட்பட்டு சொத்தினை கிரையம் பெற்றுள்ளதால் நான் தாக்கல் செய்துள்ள வழக்கு ஏற்புடையது அல்ல என்றால் ? சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வழக்கு நிலைக்கத்தக்கது அல்ல என்றால் ? சரியல்ல.

C JAYAPPRAKASH

Digitally signed by C JAYAPPRAKASH
Date: 2026.01.23 18:28:07 +0530

சார்பு நீதிபதி

ஒட்டன்சத்திரம்